RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22339

OPEN ACCESS

# திருக்கல்யாண மாதா திருத்தல செபஸ்தியார் நாடகத்தின் நம்பிக்கைகள்

அ. ஜெய சந்தியா பிரியதர்ஷினி [அ, *], பா. உமாராணி [அ]

[அ] மொழிகள் துறை-தமிழ்ப்பிரிவு, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-641021, தமிழ்நாடு, இந்தியா

# Thirukalyana Matha Shrine Sebasthiyar Drama Beliefs

A. Jeya Santhiya Priyadharshini [a, *], B. Umarani [a]

[a] Department of Languages – Tamil Wing, Karpagam Academy of Higher Education, Coimbatore-641021, Tamil Nadu, India

* Corresponding Author: aacsanthiya@gmail.com

Received: 18-02-2022
Revised: 01-06-2022
Accepted: 25-06-2022
Published: 30-07-2022

Check for updates

## ABSTRACT

Tamil language consists of three categories namely Unit, Music Drama. Drama is known as the queen of arts. The drama is very ancient and unique. Drama is a combination of both Unit, Music and performed as a story. The performing arts are narrative based and include street dance, archery, puppet show, costume dance, drama, and liturgical dance. Today, both the words 'drama' and koothu have different meanings. The songs have increased, the prose has improved, and the facilities like stage decoration have decreased is Koothu. The drama is full of facilities like songs, prose, beautiful stage, sound, light etc. Drama was considered as a branch of Koothu. Narrators say that drama is a story-driven speech. Drama is the change and development of Ku in the post 19th century period. Associate teachers were given as theater actors and professors of drama. It can be seen that the names of Koothu are given as Rama Drama Siruthondar drama, Arichandra drama. The development of street play is drama. Koothu are performed in the open air in villages and are performed for the people by folk artists. This can also be considered as rural drama. It can be seen that the drama, which first started as a street play, then turned into a stage play and developed into a literary play, has evolved and progressed and the old traditional folk plays are dying out. A song from natrinai paalai song 9 is mentioned as an example here to prove about mans trust on God due to his need. There is no known reason for the beliefs that have arisen in human life. Man was afraid of the obstacles, diseases and problems he encountered in his life. Hope was born as a result. He started doing many remedies based on faith to solve a problem. After that, he performed many rituals like sacrifices as a way of making amends to God. By doing so he was confident that everything would be fine. Through performances, rituals and ceremonies, the people of the country get what they want by begging or making amends with their faith In God. Thus in this article we can see what are the beliefs of the country people through the play performed in Thirukalyana Matha Shrine.

**Keywords:** Thirukalyana Matha, Church, Drama, Sebasthiyar, Beliefs, Rituals, Prayer, Naerchai, Folk People

## முன்னுரை

காலந்தோறும் நாட்டுப்புறப் பகுதிகளில் வாழும் மக்கள் தங்கள் வாழ்வை சில நம்பிக்கைகளோடும், சடங்குகளோடும், விழாக்களோடும், பின்னிப்பிணைந்து வாழ்ந்து வருகின்றனர். இன்றளவும் அதை கைவிடாமல் பின்பற்றி வருகின்றனர். அதனை அவர்கள் சில நிகழ்த்துக்கலைகள்

வழி பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கது. அவை தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, பாவைக்கூத்து, உடுக்கடிப்பாட்டு, நாடகம், வழிபாட்டு கூத்துகள் முதலான நிகழ்த்துக்கலைகள். அவ்வகையில், தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வட்டத்தை சார்ந்த பொத்தக்காலன்விளை எனும் கிராமத்தில் புகழ்பெற்று விளங்கும் திருத்தலமான திருக்கல்யாண அன்னை ஆலயத்தில் திருவிழா காலங்களில் மட்டும் நிகழ்த்தப்பெறும் செபஸ்தியார் நாடகம் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வருகிறது. அவர்கள் அந்த நாடகத்தை நிகழ்த்துவதால் பல நன்மைகள் கிடைப்பதாக நம்பிக்கை கொண்டு இன்றளவும் அந்த நாடகத்தை கைவிடாமல் தலைமுறைகள் தோறும் நிகழ்த்தி வருவதையும் அவர்களின் நம்பிக்கை நிறைவேறி வருவதையும் இக்கட்டுரை புலப்படுத்துகிறது. செபஸ்தியார் நாடகம் வழி அப்பகுதி நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளை இனி காண்போம்.

## திருக்கல்யாண மாதா திருத்தலம்

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் எனும் ஊரிலிருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது பொத்தக்காலன்விளை கிராமம். இந்த கிராமத்தில் வசிப்பவர்கள் கத்தோலிக்க கிறித்துவ நாடார் இனத்தைச் சார்ந்தவர்களே ஆவர். இந்த ஊரில் இருக்கும் திருக்கல்யாண மாதா திருத்தலம் புகழ்பெற்ற திருத்தலத்தில் ஒன்றாக திகழ்கிறது. இந்த ஆலயத்தில் முதல் சனிக்கிழமை நடக்கும் பிரார்த்தனை சிறப்பாக இருக்கும். இதில் கலந்துகொள்ள பல மாவட்டங்களில் இருந்தும் பக்தர்கள் கூட்டம் அலைமோதும். அத்தைகிய சிறப்பு பெற்ற திருத்தலம் இது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நுழைந்த கிறித்துவ மிஷனரிகளால் தென் தமிழகத்தில் உள்ள நாடார் இனத்தைச் சார்ந்த பெரும்பான்மையினர் குறிவைத்து மதமாற்றம் செய்யப்பட்டனர். இதில் தூத்துக்குடி மாவட்டத்தை சுற்றியுள்ள சில பகுதியைச் சார்ந்த நாடார்கள் பலர் கிறித்துவ மதத்தைத் தழுவினர். அதில் சாத்தான்குளத்தில் இருந்து ஐந்து புள்ளி இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இருந்த முதலூரும் ஒன்றாகும். முதலூரை சார்ந்த சில குடும்பங்கள் மதம் மாற்றத்திற்குப் பின் அங்கிருந்து இடம் பெயர்ந்து அருகில் இருந்த ஒரு பனங்காட்டில் குடியாகினர். அவர்களை போதகர் ஹெலன் என்பவர் வழிநடத்தினார். எனவே அந்தப் பகுதிக்கு போதகர் ஹெலன்விளை என பெயரிட்டனர். நாளடைவில் அது பொத்தக்காலன்விளை என ஆயிற்று. கிறித்தவர்கள் வழிபட்ட இயேசுவின் தாயான அன்னை மரியாளை வணங்கி அந்தப் பகுதியில் பனை ஓலையால் குடிசை ஒன்றைக் கட்டி கோவிலாக்கினர். இந்த ஊரில் பனை மரங்கள் அதிகமாக இருந்ததால் இந்தப் பகுதியில் பனைத் தொழில் செழிப்பாக இருந்தது. பதநீர் பனங்கருப்பட்டி பனங்கற்கண்டு போன்ற பொருட்கள் உருவாக்கப்பட்டு விற்கப்பட்டன. இதனால் பல ஊர் மக்களும் இங்கு குடியேறினர். ஊர் பெரிதானதால் ஆலயத்தை பெரிதாக கட்ட முடிவு செய்தனர். அதனால் ஊரில் வசதி உள்ள செல்வந்தர்களிடம் நிலம் தானமாக பெறப்பட்டு 1850-ல் 300 பேர் அமரும் வகையில் ஆலயம் உருவாக்கப்பட்டது. வெளியில் இருந்து உதவித்தொகை எதுவும் பெறப்படவில்லை ஊர் மக்களே தங்கள் உழைப்பை கொடுத்து கட்டியெழுப்பினர். 1926-ல் ஆரம்பப் பள்ளிக்கூடம் கட்டப்பட்டது. 1930-ல் புனித அன்னம்மாள் கன்னியர் மடம் உருவாக்கப்பட்டது. பின் கண்ணியர்களின் முயற்சியால் 1932-ல் பெண்கள் ஆரம்பப் பள்ளி உருவாக்கப்பட்டது. நாளடைவில் அது நடுநிலைப் பள்ளியாக 1952-லும் மேல்நிலைப் பள்ளியாக 1986 ஆம் ஆண்டும் உயர்த்தப்பட்டது. கிராமமும், மக்களும் வசதியிலும், வளர்ச்சியிலும் பெருகியது. இந்த காலகட்டத்தில் பனைத் தொழில் கைவிடப்பட்டு பிற வியாபாரங்கள் முக்கியத் தொழிலானது. அதன்பின் வளர்ச்சி நிமித்தம் 1945-ல் திருக்கல்யாண தாயின் ஆலயம் புதிதாக கட்ட ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் உழைப்பிற்குப் பின் ஆலயப் பணி நிறைவுற்றது. இந்த ஆலயம் உபகார மாதா ஆலயமாக இருந்த போதிலும் திருக்கல்யாண மாதா ஆலயம் என்றே அனைவராலும் அழைக்கப்பட்டது. மாதாவின் திருமண ஒப்பந்த நாள் நினைவாக பிரான்ஸ் நாட்டில் ஒரு ஆலயம் இருக்கிறது என்றும் அதை அடிப்படையாகக் கொண்டே இந்த கிராமத்தில் உள்ள ஆலயம் திருக்கல்யாண மாதா ஆலயம் என அழைக்கப்பட்டதாக வாய்வழி கதைகள் உண்டு என்கின்றனர். இந்த ஆலயத்தில் வேண்டியதால் திருமண வரம், குழந்தை வரம் கிடைத்ததாக பலரும் வாய்மொழியாக பேசப்பட்டதால் பக்தர்கள் வருகை பெருகியதாக இவர்கள் கூறுகின்றனர். 1949-ல் பங்கு தந்தையாக வந்த அருட்தந்தை மஸ்கரனாஸ் என்பவரால் மறை மாவட்டத்திற்கு அனுப்பப்பட்ட மனுவால்

அதிகாரப்பூர்வமாக திருக்கல்யாண மாதா ஆலயம் என அறிவிக்கப்பட்டது. அதுக்கு முன்னாடி 1945-ல் தொடங்கப்பட்ட ஆலய வேலை 1971-ல் முடிக்கப்பட்டது. ஆயிரம் மக்கள் அமரும் வகையில் இந்த ஆலயம் கட்டப்பட்டது. இதுவும் முழுக்க முழுக்க ஊர் மக்களின் உழைப்பாலே உருவாக்கப்பட்டது. சுமார் 46 அடி உயரமும் ஆறு சக்கரமும் கொண்ட தேர் உருவாக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஆலயத்திற்கு சமமான உயரத்தில் இருந்தது. பின் 1987-ல் பழைய தேர் அளிக்கப்பட்டு புதிய தேர் அதே உயரத்திற்கு தேக்கு மரக்கட்டைகளால் உருவாக்கப்பட்டது. 2010-ல் அன்னையின் பங்கு பவள விழாவை கொண்டாடிய போது பங்குத்தந்தை பபியோன் ஜோசப் அடிகளால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் 2013-ல் அன்னையின் ஆலயம் கத்தோலிக்க திருச்சபையால் திருத்தலமாக அறிவிக்கப்பட்டது. இன்று அன்னையின் ஆலயத்திற்கு திருப்பயணமாக பல்வேறு பகுதியில் இருந்தும் பக்தர்கள் கூட்டம் மாதம் முதல் சனிக்கிழமை மற்றும் அன்னையின் திருமண ஒப்பந்த திருநாளுக்கும் அலைமோதிக்கொண்டே இருக்கும் காட்சியை காண முடிகிறது.

## திருவிழா

மாதத்தின் முதல் சனிக்கிழமையில் பிரார்த்தனை நிகழ்வுகள் நடைபெறும். திருப்பலிக்கு பின் அன்னையின் தேர்பவனி மற்றும் நற்கருணை ஆசீர் நடைபெறும். இந்த நிகழ்வைக் காண பல்வேறு மாவட்டங்கள், மாநிலங்கள், பிற மதத்தவர்கள் என பல்லாயிரம் பக்தர்கள் வந்து வேண்டுதல்களை வேண்டியும், நேர்ச்சைகளை நிறைவு செய்தும், நன்றி கூறியும் செல்வதுண்டு. திருமண வரம் வேண்டி பல பெண்கள், பெற்றோர்கள், உறவினர்கள் என அனைவரும் முதல் சனிக்கிழமை தோறும் வருகை தந்து வேண்டிக்கொண்டு செல்வதுண்டு. பெண்களே தேரை சுமந்து செல்வர். இறுதியாக பக்தர்கள் அனைவருக்கும் ஊர் மக்கள் சார்பில் அசன விருந்து வழங்கப்படும். மதம், இனத்திற்கு அப்பாற்பட்ட சமபந்தி நிகழ்வாக இது அமைகின்றது. பலர் பாத்திரங்களில் புனித உணவு என்று எடுத்துச் சென்று வீட்டில் இருக்கும் நோயாளிகள், முதியவர்களுக்கு வழங்குவதுண்டு.

திருக்கல்யாண அன்னையின் திருமண ஒப்பந்த நாளை குறிக்கும் விதமாக எல்லா ஆண்டும் ஜனவரி மாதம் 14ஆம் தேதி திருவிழாவானது கொடியேற்றுத்துடன் தொடங்கப்பட்டு ஜனவரி 23ஆம் தேதி வரை பத்து நாட்கள் நடைபெறுகிறது. திருவிழாவிற்கு முந்தைய முதல் சனிக்கிழமை அன்று வழிபாட்டின் போது அன்னையின் திருமண ஓலை வாசிக்கும் சடங்கு விமரிசையாக கொண்டாடப்படும். ஜனவரி 14ஆம் தேதி கொடியேற்றப்பட்ட பின் மக்கள் அனைவருக்கும் வெற்றிலை பாக்கு கொடுக்கும் வழக்கம் தலைமுறைதோறும் பின்பற்றப்படும் ஒரு சடங்காகும். திருவிழா நிறைவில் ஒன்பதாம் மற்றும் பத்தாம் நாள் திருவிழாவில் மிகப்பிரமாண்டமாக ஜோடிக்கப்பட்ட சப்பரமானது ஊர் முழுவதும் பவனியாக கொண்டுவரப்படுகிறது. பக்தர்களே தேரை இழுத்து வருகின்றனர். தேர் வடம் இழுப்பதை சிலர் நேர்ச்சையாக செய்கின்றனர். தேர் வரும் பாதைகளை ஊர் மக்களே சுத்தம் செய்து வண்ண விளக்குகள் ஒளிரவிட்டு தெருக்கள் தோறும் மலர்களால் அலங்கரிக்கின்றனர். ஊர்வலத்தின் போது தேர் நிறுத்தப்படும் இடமெல்லாம் ஊர் மக்கள், பக்தர்கள், பிற மதத்தவர்களால், உப்பு, மிளகு, பொட்டுக்கடலை கொண்ட கலவை பனை பெட்டியில் கொண்டுவரப்பட்டு தூவப்படுகிறது. மலர் மாலை போடப்படுகிறது. அனைவருக்கும் அன்னையின் ஆசிர் பெற்ற உப்பு கலவை, மலர், பழங்கள் கொடுத்தனுப்பப்படும். இவ்வாறு வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. தேரில் சேகரிக்கப்படும் உப்பு பலரால் ஐந்து ரூபாய்க்கு வாங்கப்பட்டு வீடுகளில் வைக்கப்படுகிறது, பயன்படுத்தப்படுகிறது. திருவிழா காலத்தில் ஒரு நாள் ஊர் அசனம் போடப்படுகிறது. திருவிழாவின் நிறைவில் ஊர் மக்கள் வெளியூருக்கு செல்வோர் உண்டு செல்கின்றனர். திருவிழாவிற்கு வரும் பக்தர்களால் கொடுக்கப்படும் நேர்ச்சை பொருட்கள் (ஆடு, கோழி, மரக்கன்று, அரசி மூட்டை, புடவை, குழந்தைகள் ஆடை) ஏலம் விடப்படுகிறது. அதன் மூலம் கோவிலுக்கு காணிக்கை செலுத்துவதாக இதை செய்கின்றனர். திருவிழா முடிந்த பின் தொடர்ந்து மூன்று நாட்கள் கோயில் உருவான வரலாற்றை நாடகமாக நாட்டுப்புற மக்களே பயிற்சி செய்து தலைமுறைதோறும் நிகழ்த்தி வருகின்றனர். செபஸ்தியார் நாடகம் என்றே அதை அழைக்கின்றனர். அதைப் பற்றிய தகவல்களை இனி பார்ப்போம்.

## நம்பிக்கைகள்

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் இயற்கையின் மாற்றத்திற்கேற்ப பல வகையாக தோன்றியிருந்தன (Rejithkumar, 2020). இவை எப்போது தோன்றியது என்பதை குறிப்பிட்டு கூற முடியாது. நாட்டுப்புற நம்பிக்கைகள் மனம் சார்ந்த கூறாகவே விழங்குகிறது. காலம் காலமாக இந்த நம்பிக்கைகளானது பின்பற்றப்படுகிறது (Gnanam, 2017). மக்கள் தான் செய்கின்ற செயல்கள் யாவும் வெற்றி பெற வேண்டும், நோய்கள் தீர வேண்டும், தேவைகள் நிறைவேற வேண்டும் என்ற எண்ணத்தால் கடவுளை நம்பி வழிபட்டான் (Sithambaranar, 2020).

"வழிபட்ட தெய்வந்தான் வலினனச் சார்ந்தார்கண்

கழியும் நோய் கைம்மிக அணங்கா கியதுபோல..."

இதன் மூலம் மனிதன் தன்னை பாதுகாத்துக் கொள்ள வேண்டியே தெய்வத்தை வழிபட்டான் என்பது காண முடிகிறது.

நம்பிக்கை என்பதை விசுவாசம் என்றும் எடுத்துக் கொள்ளலாம். நம்பிக்கை என்பதற்கு ஆங்கிலத்தில் Faith, Trust, Hope, Belief, Assume போன்ற சொற்களை எடுத்துக் கொள்ளலாம். சு.சக்திவேல் அவர்கள் நம்பிக்கைகளின் வகைகள் என சிலவற்றை தொகுத்து கூறியுள்ளார். அவை, "குழந்தை பற்றிய நம்பிக்கைகள், பருவமடைதல் பற்றிய நம்பிக்கைகள், திருமணம் பற்றிய நம்பிக்கைகள், கர்ப்பிணி பெண்கள் பற்றிய நம்பிக்கைகள், வேளாண்மை பற்றிய நம்பிக்கைகள், மழை பற்றிய நம்பிக்கைகள், விலங்கு பறவை பற்றிய நம்பிக்கைகள், விருந்தினர் பற்றிய நம்பிக்கைகள், எண் பற்றிய நம்பிக்கைகள், நட்சத்திர நம்பிக்கைகள், அங்க பலன் பற்றிய நம்பிக்கைகள், மச்சங்களின் பலன் பற்றிய நம்பிக்கைகள், கிழமை பற்றிய நம்பிக்கைகள், திசை பற்றிய நம்பிக்கைகள், கோலம் பற்றிய நம்பிக்கைகள், விலக்கு பற்றிய நம்பிக்கைகள், கடவுள் பற்றிய நம்பிக்கைகள், நோய்கள் பற்றிய நம்பிக்கைகள், வீடு பற்றிய நம்பிக்கைகள், உணவு ஆடை அணிகலன்கள் பற்றிய நம்பிக்கைகள், மரணம் பற்றிய நம்பிக்கைகள், பயணம் பற்றிய நம்பிக்கைகள், ஊழ்வினை பிறவிக் கொள்கை பற்றிய நம்பிக்கைகள், சோதிடம் பஞ்சாங்கம் ராசி பொருத்தம் பற்றிய நம்பிக்கைகள், கனவு பற்றிய நம்பிக்கைகள், சகுனங்கள் பற்றிய நம்பிக்கைகள், மந்திரங்கள் பற்றிய நம்பிக்கைகள், இயற்கை உற்பாதச் சடங்குகள் பற்றிய நம்பிக்கைகள், வழக்கங்கள் பற்றிய நம்பிக்கைகள், பல்பொருள் பற்றிய நம்பிக்கைகள் முதலானவைகளாகும்". (Sakthivel, 2015) அவ்வகையில் பொத்தக்காலன்விளை என்னும் கிராமத்தைச் சார்ந்த நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளை அவர்களே நிகழ்த்தும் செபஸ்தியார் நாடகத்தின் வழி இனி காண்போம்.

## செபஸ்தியார் நாடகமும் அதன் நம்பிக்கைகளும்

பொத்தக்காலன்விளை கிராமத்தில் வாழும் நாட்டுப்புற மக்களால் அன்னையின் திருவிழா முடிந்த பின் மூன்று நாட்கள் தொடர்ந்து நிகழ்த்தப்படுகிறது செபஸ்தியார் நாடகம்.

"கொழுந்தட்டிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் காணப்படும் பொத்தக்காலன்விளை புனித செபஸ்தியார் நாடகம் 150 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிறது." (Albina queen sheeba, 2005)

நாட்டுப்புற மக்களே தலைமுறைதோறும் பயிற்சி செய்து இந்த நாடகத்தை நிகழ்த்துகின்றனர். ஊரில் வாழும் ஆண்களும் ஆண் பிள்ளைகளும் இந்த நாடகத்தில் கதாபாத்திரங்களாக வேடமிடுகின்றனர். பெண்கள் நடிப்பதில்லை. பெண் வேடத்தையும் ஆண்களே போடுகின்றனர். இரவு எட்டு மணிக்கு தொடங்கி அதிகாலை மூன்று மணிக்கு முடிக்கப்படுகிறது. முழு நாடகமானது ஓலைச்சுவடியில் கீறப்பட்டுள்ளது அது பாதுகாக்கப்பட்டு வருகிறது. முதலில் அண்ணாவியார் திசை கட்டு மந்திரத்தை ஓலைச்சுவடியை பார்த்து பாடுவார். ஒவ்வொரு கதாபாத்திரத்தின் அறிமுகத்திற்கு முன் திசை கட்டு மந்திரம் பாடப்படுகிறது. ஒவ்வொரு கதாபாத்திரமும் அண்ணாவியாரிடம் ஆசிர்வாதம் பெற்ற பின் தான் நடிக்க துவங்குவார். கதாபாத்திரம் அறிமுகம் செய்யப்படும்போது வான வேடிக்கை வெடிக்கப்படும். ஒவ்வொரு காட்சிக்கு பின் பக்திப்பாடல்கள் பின் பாட்டு குழுவினரால்

பாடப்படுகிறது. நாடகக் கதையானது பொத்தக்காலன்விளை ஊர் மக்கள் மதமாற்றம் பெற்றதையும், செபஸ்தியார் எனும் புனிதரால் மதம் போதிக்கப்பட்ட நிகழ்வையும், அவர் புரிந்த அற்புதங்களையும் காட்சிப்படுத்தும் விதமாக அமைகிறது. மூன்றாம் நாள் நாடக நிறைவில் செபஸ்தியார் மேடையில் வருவார் என்றும், கேட்கும் வரம் கிடைக்கும், நோய்கள் தீரும் என்றும் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நம்பிக்கைகள் என்னென்ன என்பதை இங்கு காண்போம்.

## திருமண வரம் பற்றிய நம்பிக்கைகள்

கேட்போருக்கு திருமண வரம் தந்ததாக வாய்மொழியாக செய்திகள் பரவ கூட்டம் அலைமோதி கொண்டிருக்கிறது பொத்தக்காலன்விளை திருக்கல்யாண மாதா திருத்தலத்தில். திருமண வரம் வேண்டுவோர்க்கு வரம் கொடுப்பதனால் உபகார அன்னையை மக்கள் திருக்கல்யாண தாய் என்றே அழைக்கின்றனர். இந்த ஆலயத்திற்கு பல மாவட்டங்கள், மாநிலங்கள், பிற மதத்தவர் என பலரும் மாதத்தின் முதல் சனிக்கிழமை தோறும் தவறாது வருகை தந்து அன்னையிடம் தங்களுக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும், உறவினருக்கும் திருமண வரம் வேண்டி வந்து பிரார்த்தனை, தேர் பவனி, நற்கருணை ஆசீர் முதலான நிகழ்வில் கலந்துகொண்டு வேண்டி செல்கின்றனர். அவ்வாறு வேண்டுபவர்கள் இத்தனை சனிக்கிழமைகள் தவறாது ஆலயத்திற்கு வருவதாகவும், திருமணம் முடிந்த பின் திருவிழாவில் 10ஆம் நாள் தேர் வடம் பிடித்து இழுப்பதாகவும், சேலை காணிக்கை செலுத்துவதாகவும், தங்க நகை செய்து வைப்பதாகவும், ரோஜா மாலை போடுவதாகவும் நேர்ச்சை செய்து செல்கின்றனர். திருவிழாவுக்குப் பின் நடக்கும் செபஸ்தியார் நாடக நிறைவில் கொடுக்கப்படும் மாங்கனி உண்டால் திருமண வரம் கிட்டும் எனும் நம்பிக்கையும் மக்களிடம் காணப்படுகிறது. இவ்வாறு நேர்ச்சை செய்து அன்னையிடம் வேண்டினால் திருமண வரம் நிச்சயமாக கிடைக்கும் என நம்பிக்கையுடன் செயல்படுகின்றனர். வேண்டியதால் திருமண வரம் கிடைத்தவர்கள் அன்னைக்கு நன்றி செலுத்தும் வகையில் தாங்கள் செய்த நேர்ச்சைகளை தவறாது ஜனவரி மாதம் நடக்கும் எழில் மிகு அன்னையின் திருவிழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு செய்து மகிழ்கின்றனர். அன்னையிடம் நேர்ச்சை செய்து வேண்டினால் நிச்சயம் திருமண வரம் கிடைக்கும் என பலரின் மனதிலும் நம்பிக்கை உருவாகியுள்ளதை காண முடிகிறது.

## குழந்தை பேரு பற்றிய நம்பிக்கைகள்

திருக்கல்யாண மாதாவின் திருவிழா நிறைவிற்கு பின் தொடர்ந்து மூன்று நாட்கள் நடத்தப்படும் செபஸ்தியார் நாடகமானது இரவு எட்டு மணிக்கு தொடங்கி அதிகாலை மூன்று மணி அளவில் முடியும். அந்த நாடகத்தின் நிறைவு நாளன்று செபஸ்தியார் எனும் புனிதர் மேடைக்கு வருவார் என பக்தர்களால் நம்பப்படுகிறது. அஞ்சு நாடகத்தில் செபஸ்தியரை பட்ட மரத்தில் கட்டி வைக்கப்படும் காட்சி இடம்பெறுகிறது அந்த பட்ட மரம் புனித செபஸ்தியாரின் மகிமையால் கனி தரும் மரமாக மாற்றம் பெறும் எனும் கிறித்துவ வரலாற்றுக் காட்சி இடம்பெறுகிறது. அதை நாடகத்தில் நாட்டுப்புற மக்களே மிக அழகாக நிகழ்த்துகின்றனர். அந்த காட்சியில் பட்ட மரத்தில் மாங்கனிகளை கட்டி தொங்கவிட்டு நாடக நிறைவில் குழந்தைகள் இன்றி வாடும் பல தம்பதியருக்கும் கொடுக்கப்படுகிறது. செபஸ்தியாரின் ஆசிரியரும் அன்னையின் ஆசிரும் பெற்று நம்பிக்கையுடன் அந்த கனியை இணைந்து உண்ணும் தம்பதியருக்கு நிச்சயம் குழந்தை பிறக்கும் எனும் மரபு இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அந்த ஊர் மக்களால் நம்பப்பட்டு பின்பற்றி வரப்படுகிறது. கனியை உண்டபின் குழந்தை வரம் கிடைத்ததாக பல வாய்மொழி தகவல் பரவிய பின் பலதரப்பட்ட மக்களும் அதில் நம்பிக்கை கொண்டு நாடகத்தில் கலந்துகொண்டு கனியைப் பெற்று செல்கின்றனர். மேலும் திருக்கல்யாண அன்னையிடம் குழந்தை வரம் வேண்டும் தம்பதியர் மாதத்தின் முதல் சனிக்கிழமை தோறும் திருத்தலம் வந்து வேண்டுகின்றனர். அவர்கள் குழந்தை வேண்டி குழந்தை பிறந்த பின் குழந்தை இயேசுவுக்கு வெண்ணிற ஆடை கொடுப்பதாக நேர்ச்சை செய்கின்றனர். வேண்டியதால் குழந்தை பெற்ற தம்பதியர் அடுத்த திருவிழாவின்போது குழந்தையுடன் வந்து தங்கள் நேர்ச்சையை செய்து செல்கின்றனர். ஒரு சிலர் மஞ்சள் கயிற்றில் கைக்குட்டை ஒன்றை தொட்டில் போல கட்டி அதில் மஞ்சள் கிழங்கை

குழந்தையாக வைத்து அன்னையின் தேரில் கட்டி வேண்டுகின்றனர். சிலர் வெள்ளியில் தொட்டில் வைப்பதாக நேர்ச்சை செய்து அதை நிறைவேற்றுகின்றனர். அன்னையிடம் வேண்டி நேர்ச்சை செய்து நாடகத்தில் கலந்து மாங்கனி வாங்கி உண்டால் குழந்தை பேரு கிட்டும் என மக்கள் நம்புகிறது புலனாகிறது.

## நோய்கள் பற்றிய நம்பிக்கைகள்

தீராத நோய்கள் தீர பக்தர்கள் அன்னையிடம் வேண்டி நேர்ச்சை செய்து செபஸ்தியார் நாடகத்தில் கலந்து கொண்டு நேர்ச்சைகளை செய்கின்றனர். கோழியை வளர்த்து திருவிழா நாட்களில் ஆலயத்தில் அன்னையின் முன் கோழி காணிக்கை செய்தால் நோய் தீரும் என நம்புகின்றனர். செபஸ்தியார் நாடகம் நடந்த மேடையில் இருக்கும் மணலை நாடக நிறைவு நாளன்று மக்கள் வீட்டுக்கு எடுத்து செல்கின்றனர். மணலை வீட்டில் வைத்தால் தீய சக்திகள் அண்டாது என்றும் மணலை நீரில் கரைத்துக் குடித்தால் நோய்கள் பல தீரும் என்றும் நம்புகின்றனர். இதற்காகவே நாடகத்தில் கலந்து வேண்டிக்கொண்டு மணலை எடுத்துச் செல்கின்றனர். மேலும் நாடகத்தின் நிறைவு நாளன்று தீராத நோய்கள் உள்ளவர்கள் முறுக்கு மாலையை செபஸ்தியாரின் சொரூபத்திற்கு அணிவிக்கின்றனர். அவ்வாறு செய்வதால் நோய்கள் தீரும் என்று நம்புகின்றனர். நோய்கள் காணாமலே போனதாக சாட்சிகளும் சிலர் கூறியுள்ளனர். மேலும் முறுக்கு மாலை அணிந்த செபஸ்தியாரின் சொரூபத்தை ஊர் முழுவதும் சுற்றி இளைஞர்களால் தூக்கிவரப்படுகிறது. அவ்வாறு கொண்டு வருவதன் மூலம் கொடிய நோய்கள், தீராத பிணிகள் தீரும் என்ற நம்பிக்கையுடன் காலம் காலமாக இந்த சடங்கை செய்கின்றனர். அந்த காலத்தில் காலரா, அம்மை போன்ற நோய்கள் ஊரெங்கும் பரவிய காலத்தில் இந்த முறை நம்பிக்கையுடன் பின்பற்றப்பட்டதாகவும் ஊர் மக்கள் நோயிலிருந்து விடுபட்டதாகவும் கொள்ளை நோயை செபஸ்தியார் விரட்டுவார் என்றும் மக்கள் நம்புகின்றனர். அதேபோன்று முற்காலத்தில் நாடகம் நடந்து கொண்டிருக்கும்போது உலக்கையை மேடை முன் நிறுத்தி அதன் மீது தேங்காய் விளக்கேற்றி அனையாமல் பார்த்துக்கொள்வர். இதை நோயால் வருந்துபவரே செய்வார். இப்படி செய்வதால் நோய்கள் தீரும் என பரவலாக நம்பப்படுகிறது. தற்காலத்தில் உலக்கை வைப்பதில்லை மாறாக மேடை மீது தேங்காய் தீபம் வைக்கின்றனர். அதேபோல் மெழுகுதிரிகளும் ஏற்றி வைக்கின்றனர். மெழுகு கரைவது போல நோயும் கரைந்து போகும் என நம்புகின்றனர். பலரும் குணமடைந்ததாக சாட்சி கூறுவதாக வாய்மொழி தகவல்கள் உள்ளது. இன்றளவும் இந்த நம்பிக்கை மக்களிடம் காணப்படுகிறது.

## முடிவுரை

நாட்டுப்புற மக்களின் வாழ்வில் நம்பிக்கை ஒரு முக்கிய பங்காக திகழ்கிறது. இன்றைய நாகரீக வளர்ச்சியினால் நம்பிக்கைகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் நாட்டுப்புற மக்கள் நம்பிக்கையை விட்டு விலகவில்லை. தங்கள் வாழ்வோடு கடவுள் நம்பிக்கை பின்னிப்பிணைந்துள்ளதைக் காண முடிகிறது. திருக்கல்யாண தாயிடம் வேண்டினால் நல்லதே நடக்கும் என நம்புகின்றனர். வேண்டுதல் செய்வதும் நேர்ச்சைகள் செய்வதும் நன்மையை தரும் எனும் எண்ணம் நாட்டுப்புற மக்களிடம் காணப்படும் மாபெரும் நம்பிக்கையாகும்.

## References

Albina queen sheeba, J. (2005) Punitha Parbarammaal Naadaga Nigalthal, MPhil Thesis, Manonmaniam Sundaranar University, Tirunelveli, India

Gnanam, (2017) Nattuppura Iyal Thotram Valarchi, Saratha Publication, Chennai, India.

Jesuthasan, M. (2016) Namathu Gramam, Chennaival Porppainagar Makkal Nalasangam, Chennai, India.

Rejithkumar, T. (2020) Naattuppura Iyal, New Century Book House, Chennai, India.

Sakthivel, S. (2015) Naattuppura Iyal Aivu, Manivasagar Publication, Chennai, India.

Sithambaranar, S. (2020) Palanthamilar Vaalvum Valarchiyum, New century book house, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License